

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், ஓசூர் மாநகர தி.மு.க. சார்பாக, மாநகரச் செயலாளரும், மாநகர மேயருமான சத்யா தலைமையில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் மேற்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் முன்னிலையில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி கலந்து கொண்டு பொங்கல் வைத்து மாநகர தி.மு.க. சார்பாக நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாவட்ட அவைத் தலைவர் யுவராஜ், பொருளாளர் சுகுமாரன், மாநில துணைச் செயலாளர்கள் மாதேஸ்வரன், அரியப்பன், துணை மேயர் ஆனந்தய்யா, மாநகர துணைச் செயலாளர் கோபாலகிருஷ்ணன், பகுதிச் செயலாளர்கள் வெங்கடேஷ், ராமு, ராஜா, ஒன்றியச் செயலாளர்கள் கஜேந்திர மூர்த்தி, நாகேஷ், இளைஞர் அணி அமைப்பாளர் சுமன் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் பெண்கள் குழந்தைகள் ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை முன்னிட்டு திராவிடப் பொங்கல் என்ற தலைப்பில் அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டுப் போட்டிகளை நடத்துமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க ஈரோடு தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் ஈரோடு மாநகரம் அனைத்து மாநகர பகுதிகளிலும் விளையாட்டுப்போட்டி நடத்தப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி பரிசு கோப்பைகளை வழங்கினார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநகரக் கழகச் செயலாளர் மு.சுப்பிரமணியம், பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.குமாரவடிவேல், வி.சி.நடராஜன், வி.செல்வராஜ், பொ.ராமசந்திரன், அக்னி சந்துரு, வில்லரசம்பட்டி முருகேசன், குறிஞ்சி என்.தண்டபாணி, க.லட்சுமணகுமார் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகரக் கழக நிர்வாகிகள், மண்டலக் குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு ஊர்க்காவல் படையில் சேர்க்கத் தேர்வான

# 50 திருநங்கைகளுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஜன. 15 -**

**தமிழ்நாடு ஊர்க்காவல் படையில் சேர்க்க தேர்வு செய்யப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்ட 50 திருநங்கைகளுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஊர்க்காவல்படை உறுப்பினர் நியமன ஆணைகளை வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.1.2026) தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில், தமிழ்நாடு ஊர்க்காவல் படையில் சேர்க்க தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்ட 50 திருநங்கையர்களுக்கு ஊர்க்காவல் படை உறுப்பினர் நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 7 திருநங்கையர்களுக்கு நியமன ஆணைகளை வழங்கினார்.

2025–2026ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட உரையில் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்களால், திருநங்கையருக்கு உரிய விழிப்புணர்வையும், வேலைவாய்ப்புகளில் சமவாய்ப்பையும் வழங்குவதன் மூலம் அவர்களுடைய கண்ணியமான வாழ்வினை உறுதி செய்திட முடியும் என்று இந்த அரசு உறுதியாக நம்புகிறது. இந்த உயர் நோக்கத்தினை முன்னிறுத்தி, ஓர் முன்னோடி முயற்சியாக திருநங்கையர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கி ஊர்க்காவல் படையில் ஈடுபடுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக 50 திருநங்கைகளைக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, காவல்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநரின் பரிந்துரையில், ஊர்க்காவல் படை காவல்துறை தலைவர் அவர்களால்

50 திருநங்கைகளை தமிழ்நாடு ஊர்க்காவல் படையில் உறுப்பினராக நியமிக்க பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களுக்கு ஊர்க்காவல் படை உறுப்பினர் நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக சென்னை பெருநகர காவல் ஆணையரகம், ஆவடி மற்றும் தாம்பரம் ஆகிய காவல் ஆணையரகங்களிலிருந்து 7 திருநங்கையர்களுக்கு ஊர்க்காவல்படை உறுப்பினர் நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் வழங்கினார்.

முதற்கட்டமாக தமிழ்நாடு ஊர்க்காவல் படையில் சென்னையில் 5 நபர்கள், தாம்பரத்தில் 15 நபர்கள், ஆவடியில் 10 நபர்கள், மதுரையில் 7 நபர்கள், கோயம்புத்தூரில் 7 நபர்கள் மற்றும் திருச்சிராப்பள்ளியில் 6 நபர்கள், என மொத்தம் 50 திருநங்கைகள் காவல் துறையுடன் இணைந்து போக்குவரத்து மேலாண்மை, திருவிழாக் காலங்களில் கூட்டநெரிசலைக் கட்டுப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் வகையில் உரிய பயிற்சிகள் வழங்கி ஊர்க்காவல் படையில் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல் துறை தலைமை இயக்குநர்/படைத்தலைவர் (பொறுப்பு) க.வெங்கடராமன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.ஜெயஸ்ரீ முரளிதரன், குடிமை பாதுகாப்பு மற்றும் ஊர்க்காவல்படை தலைவர் திருமதி. வே.ஜெயஸ்ரீ ஆகியோர் கலந்து கொண்டனர்.

### "உலகம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டத்தின் கீழ் – அரசு எம்.ஜி.ஆர். திரைப்பட

# தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவ - மாணவியர்க்கு 62 மடிக்கணினிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

சென்னை, ஜன.15–

"உலகம் உங்கள் கையில்" என்னும் மாபெரும் திட்டத்தின் கீழ், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தை சார்ந்த இறுதியாண்டு மாணவ, மாணவியர்களுக்கு 62 மடிக்கணினிகளை வழங்கினார்.

முதலமைச்சர் அவர்கள், செயற்கை நுண்ணறிவு உலகெங்கும் பெரும் தாக்கத்தை உருவாக்கி வரும் இந்த வேளையில், நமது மாணவர்களின் தொழில்நுட்ப அறிவையும் அவர்களின் தனித்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் தொடர்ந்து வழங்கிட வேண்டிய வரலாற்றுத் தேவை தற்போது எழுந்துள்ளதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டின் பல்வேறு கலை, அறிவியல், பொறியியல், வேளாண்மை மற்றும் மருத்துவம் உள்ளிட்ட அனைத்து கல்லூரிகளிலும் பயின்று வரும் மாணவர்களுக்கு உயர்தொழில் நுட்பச் சாதனங்களை வழங்கிடத் திட்டமிட்டு, கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக முதற்கட்டமாக 10 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் "உலகம் உங்கள் கையில்" என்னும் மாபெரும் திட்டத்தினை 05.01.2026 அன்று தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் 12.01.2026 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், "உலகம் உங்கள் கையில்" என்னும் மாபெரும் திட்டத்தின் கீழ், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் இறுதியாண்டில் பயிலும் திரைப்பட பயிற்சி மாணவர்களில் ஒளிப்பதிவு பிரிவைச் சார்ந்த 12 மாணவர்களுக்கும், எண்மிய இடைநிலைப்பிரிவைச் சார்ந்த 4 மாணவர்களுக்கும், ஒலிப்பதிவு பிரிவைச் சார்ந்த 8 மாணவர்களுக்கும், இயக்குதல் மற்றும் திரைக்கதை பிரிவைச் சார்ந்த 14 மாணவர்களுக்கும், படத்தொகுப்பு பிரிவைச் சார்ந்த 12 மாணவர்களுக்கும் மற்றும் உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் பிரிவைச் சார்ந்த 12 மாணவர்கள் என மொத்தம் 62 மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மடிக்கணினிகளைப் பெற்றுக் கொண்ட இந்நிறுவன மாணவர்கள், "திரைத்துறையில் வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்ப திரைப்படத்துறையில் காணப்படும் புதுமையான படைப்புகள், திரைத்தயாரிப்புகள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள், திறன் மேம்பாட்டு முன்னெடுப்புகள் உள்ளிட்டவற்றை எளிய மற்றும் சிறந்த முறையில் அணுகுவதற்குப் பயனுள்ளதாக இந்த மடிக்கணினிகள் பேருதவியாக இருக்கும்" எனவும், "உலகம் உங்கள் கையில்" திட்டத்தின் கீழ், மடிக்கணினிகளை வழங்க ஆணையிட்ட முதலமைச்சர் அவர்களுக்கு மகிழ்ச்சி பொங்க நன்றிகள் தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) முனைவர்.இரா.பாஸ்கரன், இணை இயக்குநர் (ம.தொ) / முதல்வர் (மு.கூ.பொ) மு.மேகவர்ணம் ஆகியோர் உடனிருந்தனர்.



தஞ்சை வடக்கு மாவட்டம் கும்பகோணம் மாநகர தி.மு.க. சார்பில் காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு நூல் அறிமுக நிகழ்ச்சி மற்றும் திராவிட பொங்கல் விழாவில் மூத்த ஊடகவியலாளர் தி.செந்தில் வேல் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தாட்கோ தலைவர், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ந.இளையராஜா, மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி. அய்யாராசு, ஜெ.நடராஜன், ந.ஜெயலெட்சுமி, மாநில இலக்கிய அணி துணை செயலாளர் ஆடுதுறை மு.உத்திராபதி, இளம் பேச்சாளர்கள் திருவாரூர் கனிமொழி சொல்லருவி தீன்ஷா நூப், வழக்கறிஞர் ம.மோகநிதி, மாநகரக் கழக நிர்வாகிகள் எஸ்.வாசுதேவன், எஸ்.ரவிச்சந்திரன், எம்.சிவானந்தம், டி.செந்தாமரை, பகுதிச் செயலாளர்கள் மு.கண்ணன், இரா.செல்வராஜ், இரா.கல்யாணசுந்தரம், டி.வி.கிருஷ்ணமூர்த்தி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கொள்கை –

# தமிழ்நாடு சுழற் பொருளாதார முதலீட்டுக் கொள்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, ஜன. 15-**

**தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கொள்கை (Tamil Nadu Warehousing Policy) 2026 மற்றும் தமிழ்நாடு சுழற் பொருளாதார முதலீட்டுக் கொள்கை (Tamil Nadu Circular Economy Invest ment Policy) 2026 முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வெளியிடப்பட்டன.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.01.2026) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கொள்கை (Tamil Nadu Warehousing Policy) 2026 மற்றும் தமிழ்நாடு சுழற் பொருளாதார முதலீட்டுக் கொள்கை (Tamil Nadu Circular Economy Investment Policy) 2026 ஆகிய துறை சார்ந்த கொள்கைகளை வெளியிட்டார்.

தமிழ்நாடு, இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாகவும், அதிக தொழில்வளம் மிகுந்த மாநிலமாகவும் வளர்ச்சி பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் அதிக முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக, தமிழ்நாட்டை நிலையான உற்பத்திக்கான உலகளாவிய மையமாக மாற்றியமைக்கும் நோக்கில், உலகளாவிய தொழில் சூழலமைப்பு மற்றும் மாநிலத்தின் தேவைகள், ஆகியவற்றை கருத்திற்கொண்டு, துறை சார்ந்த கொள்கைகளை தமிழ்நாடு அரசு வெளியிட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, இன்று இவ்விரு கொள்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கொள்கை (Tamil Nadu Warehousing Policy) 2026**

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு, வலுவான சரக்கு போக்குவரத்து (Logistic) கட்டமைப்பு உதவி புரிந்து வருகிறது. இந்த வளர்ச்சியில் சேமிப்புக் கிடங்கு கட்டமைப்பு (Warehousing Infra) மிகப் பெரிய பங்கு வகிக்கிறது. எனவே, இக்கட்டமைப்பை ஒழுங்குபடுத்தி, மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு, ஒருங்கிணைந்த புதிய கிடங்கு கட்டமைப்பின் வளர்ச்சி (Integrated Greenfield Develop ment), பழைய கிடங்குகளின் திறன் விரிவாக்கம் (Brownfield Capacity Expansion), கிடங்கு துறையில் பொது மற்றும் தனியார் பங்களிப்பு (Public, Private Partnership in Warehousing), நிலையான மற்றும் நவீன தொழில்நுட்ப கிடங்குகள் (Sustain & Smart Warehousing), பொருட்களுக்கேற்ற பிரத்யேகக் கிடங்குகள் (Commodity Specific Warehousing) மற்றும் கிடங்குத் துறையில் தொழில் புரிவதற்கு உகந்த எளிய வழிமுறைகள் (Ease of doing Business for Warehousing) ஆகிய 6 கருப்பொருட்களைக்கொண்ட தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கொள்கை வடிவமைத்து வெளியிடப்பட்டுள்ளது.

**சிறப்பம்சங்கள்**

டெல்டா மற்றும் தொழில் துறையில் பின்தங்கியுள்ள மாவட்டங்களில் சேமிப்புக் கிடங்குகள் அமைப்பதற்கு நிதி சார்ந்த சிறப்பு ஊக்க சலுகைகள் வழங்குதல். குறிப்பாக, தகுதியான முதலீடுகளில் 25 சதவிகித நிலையான மூலதன மானியம் (ரூ.2 கோடிக்கு மிகாமல்) மற்றும் நில விலை மானியமாக வணிக நில விலையில் 50 சதவிகித சலுகை;

புதிய சேமிப்புக் கிடங்குகள் அமைக்கும் போது மேற்கொள்ளப்படும் பசுமை முன்முயற்சி களுக்கான மதிப்பில் 25 சதவிகித மானியம் (ரூ.2 கோடிக்கு மிகாமல்);

பயிற்சி மானியம் புதிய சேமிப்புக் கிடங்கு களின் பணியாளர்களுக்கு தொழிற்நுட்ப பயிற்சி வழங்குவதற்கான தொகையில் 50 சதவிகித மானியம் (ஒரு பணியாளருக்கு ரூ.10,000/க்கு மிகாமல்);

அரசு நிலங்களில் பெரிய அளவிலான புதிய சேமிப்புக் கிடங்குகள் அமைப்பதற்கு சிறப்பு ஊக்க சலுகைகள்;

பெரிய அளவிலான சேமிப்புக் கிடங்குகள் அமைப்பதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் நிறுவுவதற்கான முதலீட்டில் 12 சதவிகித மானியம் (ரூ.2 கோடிக்கு மிகாமல்);

தொழிற்நுட்பத் துறை, சுகாதார பாதுகாப்புத் துறை, பொறியியல் துறை மற்றும் வேளாண்மை துறைகளின் குறிப்பிட்ட பொருட்கள் சார்ந்த (Commodity specific) புதிய சேமிப்புக் கிடங்குகளில் தொழிற்நுட்ப முன்முயற்சி களுக்கான செலவில் 25 சதவிகித மானியம் (ரூ.2 கோடிக்கு மிகாமல்);

வணிகம் புரிவதற்கு உகந்த சூழலை வழங்கும் வகையில், வெள்ளை வகை நிலையை (White Category Status) சேமிப்புக் கிடங்கு களுக்கு நீட்டித்தல், ஒற்றை சாளர இணையம் மூலம் அனுமதிகள் வழங்குதல் மற்றும் அரசு தொழிற் பூங்காக்கள் மற்றும் தொழிற்பேட்டைகளில் சேமிப்பு கிடங்குகளுக்கு நிலம் ஒதுக்கீடு.

**தமிழ்நாடு சுழற் பொருளாதார முதலீட்டுக் கொள்கை (Tamil Nadu Circular Economy Investment Policy) 2026**

உலகளாவிய நிலைத்தன்மை மற்றும் வர்த்தகத் தரங்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலம், ஏற்றுமதி போட்டித்திறனை வலுப்படுத்துவதுடன், புதிய முதலீடுகள் ஊக்குவிப்பது, அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குவது, சுழற்சி மற்றும் நிலையான உற்பத்தியில் தமிழ்நாட்டின் நிலையை மேலும் மேம்படுத்தி, நிலைத்தன்மை யும் நெகிழ்வுத் தன்மையும் கொண்ட வளர்ச்சியை முன்னெடுப்பதன் மூலம் மாநிலத்தை உலகத்தரம் வாய்ந்த உற்பத்தி மையமாக நிலைநிறுத்துவது, தமிழ்நாடு சுழற் பொருளாதார முதலீட்டுக் கொள்கை 2026ன் முக்கிய நோக்கமாகும்.

**சிறப்பம்சங்கள்**

சுழற் பொருளாதாரம் அடிப்படையிலான உற்பத்தியை விரைவாகப் பின்பற்ற முதன்மைத் துறைகளான ஜவுளி, வாகனத்துறை, மின்னணுவியல் மற்றும் நெகிழித் துறைகளில் தனிக்கவனம் செலுத்துதல்;

மறுசுழற்சி உற்பத்தித் துறையில் முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில், மறுசுழற்சி தொழிற்சாலைகளுக்கு முதலீட்டில் 10 சதவிகித மூலதன மானியம், ஒரு பணியாளருக்கு மாதம் ரூ.10,000 வீதம் வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மானியம் மற்றும் ஒரு பணியாளருக்கு ரூ.10,000 வீதம் திறன் மேம்பாட்டு ஊக்குவிப்பு மானியம் வழங்குதல்;

கழிவு மேலாண்மை தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு (Technology Enablers/ Platform Entities) முதல் ஆண்டில் 30 சதவிகிதம், இரண்டாம் ஆண்டில் 20 சதவிகிதம் மற்றும் மூன்றாம் ஆண்டில் 10 சதவிகிதம் ஊதிய மானியம் வழங்குதல்;

சுழற்சி பொருளாதார தகவல் தளம், தமிழ்நாடு பசுமை காலநிலை நிதியம், குறைந்த கார்பன் பசுமை தொழிற்பூங்காக்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கான பசுமை தரவரிசை மதிப்பீடு போன்ற வழிமுறைகளால் இத்துறையை வலுப்படுத்துதல்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கொள்கை 2026 மற்றும் தமிழ்நாடு சுழற் பொருளாதார முதலீட்டுக் கொள்கை 2026 ஆகிய கொள்கைகள், இத்துறைகளில் தமிழ்நாட்டை முன்னணி மாநிலமாக நிலை நிறுத்துவதுடன், 2030ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளதாரம் என்ற முதலமைச்சர் அவர்களது இலட்சிய இலக்கினை அடையவும் உதவும்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மருத்துவர் தாரேஸ் அகமது, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் ஜெ.காமராஜ் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

திருவாரூர், ஜன.15–

திருவாரூர் நகர்மன்ற முன்னாள் உறுப்பினரும், நகர 20 வது வார்டு பிரதிநிதியுமான ஜெ.காமராஜ் அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு வயது 51 ஆகும்.

மறைந்த காமராஜ் அவர்கள் திருவாரூர் நகர்மன்றத்திற்கு 20 வார்டிலிருந்து சென்ற முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலராவார். தற்போது 20 வது வார்டுகழக பிரதிநிதியாக இருந்து தீவிர கழகப்பணியாற்றிவந்தார். திருவாரூர் பஜனைமட சந்தில் வசித்துவந்த காமராஜ் நேற்று முன்தினம் மதியம் இயற்கை எய்தினார்.



மறைந்த காமராஜுக்கு சுஜாதா என்கிற மனைவியும், சின்மயி, சாருமாயி என்கிற இரண்டு மகள்களும் உள்ளனர்.

அன்னாரின் மறைவின் தகவலறிந்த மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., நகரக் கழகச் செயலாளர் வாரை பிரகாஷ் மற்றும் பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில் உள்ளிட்ட நகர நிர்வாகிகள், நகர்மன்ற தலைவர் புவனப்ரியா செந்தில் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த காமராஜ் அவர்களின் இறுதி ஊர்வலம் நேற்று மதியம் (14.01.2026.புதன்) 12.00 மணியளவில் திருவாரூர் பஜனை மட சந்தில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.



கோவை மாவட்டக் கழக முன்னோடி துரை.தேவராசன் அவர்களின் 32 ம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிச்சாமி தலைமையில் மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன் முன்னிலையில் அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் கழக தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர்.மகேந்திரன், சட்டத்துறை இணைச்செயலாளர் வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி, மாவட்ட துணைச் செயலாளர் கல்பனா செந்தில், பொதுக்குழு உறுப்பினர்கள் வெநா.உதயக்குமார், மு.ம.ச.முருகன், புதூர் மணிகண்டன், கார்த்திகேயன் உள்பட பகுதி கழக பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.